**தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

தலைப்பு 103 - பாதுகாப்பு அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஜூலை 25 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

--------------------

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

------------------------------------

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

-------------------------------------------------------------

அமைச்சுக்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 19,497.42 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 14,476.71 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 5,020.71 மில்லியன் அதாவது 25.75 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| **செலவினம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதிஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| மீண்டுவருவன | 5,676.98 | 5,363.53 | 313.45 | 5.52 |
| மூலதனம் | 13,820.14 | 9,113.18 | 4,707.26 | 34.06 |
| மொத்தம் | **19,497.42** | **14,476.71** | **5,020.71** | **25.75** |
| | ======= | ======= | ======= | |

2.2 **வருமானக் கணக்கு**

**மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

அமைச்சினால் 2015 ஆண்டிற்கான வருமானக் குறியீடு ஒன்றிற்காக ரூபா 12.50 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 12.95 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 3.6 சதவீதத்தினை மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| **வருமானக் குறியீடு** | **2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு** | | | **மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக மிகை** |
|---|---|---|---|---|
| | **மதிப்பீட்டு வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **மிகை** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 10-03-07-05 | 12.50 | 12.95 | 0.45 | 3.6 |

2.3 **முற்பணக் கணக்கு**

2.3.1 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 10301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடி யானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடி யானது** |
| **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** | **ரூபா.மில்லி யன்** |
| 47.48 | 45.16 | 39.48 | 50.30 | 275.00 | 134.99 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழ் காணப்பட்ட 02 கட்டுநிதிக் கணக்குகளில் மீதிகளின் கூட்டுத்தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6.88 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கட்டுநிதிக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/0000/00/0027/0015/000 | 0.33 |
| 7002/0000/00/0442/0015/000 | 6.55 |
| மொத்தம் | **6.88** |

2.5 **பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழ் காணப்படும் 04 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 97.71 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்குகளின் இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0115/000 | 0.81 |
| 6000/0000/00/0013/0072/000 | 45.97 |
| 6000/0000/00/0016/0063/000 | 9.85 |
| 6000/0000/00/0019/0015/000 | 41.08 |
| மொத்தம் | **97.71** |

2.6 **கணக்காய்வு அவதானிப்பு**

பாதுகாப்பு அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | காணிகளுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நட்டங்கள் தொடர்பாக பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்படவில்லை. |
| (iii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு | நிதிப் பிரமாணம் 1645(அ) | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக் கையின் 09(1) ஆம் பந்தி | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 01 கணக்காய்வு ஐய வினாவிற்கு 2016 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐய வினாவுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 14,476 மில்லியன் தொகையாக இருந்தது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 17 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுதொகை ரூபா 16.66 மில்லியனான மொத்த தேறிய ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 72 செலவு விடயங்களின் மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயத்துடன் தொடர்புடைய தேறிய ஏற்பாடுகளில் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சு அளவைக் கொண்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் 18 மாற்றப்பத்திரங்களைப் பயன்படுத்தி நிதி ஏற்பாடுகளை அந்தந்த செலவு விடயங்களிடையே மாற்றப்பட்டிருந்த போதிலும், அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 70.92 மில்லியன் தொகையினை மீளாய்வாண்டு இறுதி வரை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) 21 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 165.47 மில்லியன் தொகை மற்றும் 22 மூலதன செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 5917.92 தொகை சேமிக்கப்பட்டதற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் சரியான காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக பல்கலைக்கழகத்தினால் அரச வங்கி ஒன்றில் இருந்து பெற்றிருந்த கடன் தொகைக்காக ரூபா 1540.97 மில்லியன் வட்டி செலுத்தியிருந்தது. அச்செலவுகளில் ரூபா 39.43 மில்லியன் பிறழ் வட்டிச் செலவு ஒன்றும் உள்ளடங்கியிருந்தது.

(ஊ) நீர் கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணம் என மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 2.26 மில்லியன் தொகையினை உரிய செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யாமல் வாடகை மற்றும் குத்தகை செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை மிகைத்திருந்த (காணி வைப்புக்கள் தவிர) கூட்டுத்தொகை ரூபா 20.41 மில்லியன் தொகைக்கான 15 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.5 வருமானக் கணக்குகள்

அமைச்சுச் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 10.03.07.05 இலக்க அனுமதிப்பத்திரக் கட்டண வருமானக் குறியீட்டுக்காக வருமான மதிப்பீடுகள் தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய கடமைகள் சாட்டப்பட்டிருந்தன. அவ் வருமான குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 1.42 மில்லியனாக இருந்ததுடன் அதில் அடங்கியிருந்த முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானங்களின் காலவீச்சு குறிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானங்களை அறவீடு செய்தல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை பலவீன நிலையில் இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கில் ரூபா 0.62 மில்லியன் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிடைக்கப்படுகின்ற பணம் உரிய முறையில் கணக்கீடு செய்யப்படுகின்றது என்பதற்கான கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் செயற்படுத்துவதில் பலவீனங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) 2002 ஜூலை 17 ஆந் திகதி 01/2002 ஆம் இலக்க அரச நிதிக்கொள்கை மற்றும் பொருளாதார விவகார சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் தொடர்பான செயலாற்றுகை உள்ளடக்கிய அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்கூறிய சுற்றறிக்கையின் (iii) ஆம் பந்தியின் பிரகாரம் 2015 திசெம்பர் 11 திகதிய பீஎப்டி/04/08/01/59/பொது ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கட்டண அறவீடுகளை திருத்துவதற்கான சுற்றறிக்கையின் 02(1) ஆம் பந்தியின் பிரகாரம், பொருளாதார நிலைமையில் மாற்றங்களை கவனத்தில் எடுத்து பல்வேறு சேவைகளுக்காக அறவீடு செய்யும் கட்டணம் காலத்துக்கு ஏற்ப திருத்தப்பட வேண்டியிருந்தது. 1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கிகள் (திருத்த) சட்டத்தின் கீழ் அறவீடு செய்யப்படும் துப்பாக்கி அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வெடிபொருட்கள் (திருத்த) சட்டத்தின் கீழ் அறவீடு செய்யப்படும் வெடிபொருட்கள் அனுமதிப்பத்திரக் கட்டணம் 2000 ஆம் ஆண்டின் பின்னர் திருத்தங்கள் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

விடய இலக்கம் 10301 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9.89 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன், அந்நிலுவை மீதிகள் 1 வருடம் முதல் 30 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் விடயங்கள் பலவீன நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள 114 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடம் நிலுவையாக இருந்த ரூபா 3.62 மில்லியன் தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. 2004 ஒக்தோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு

சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு அந்த நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த நிலுவையாகவிருந்த கடன் மீதியில் 101 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடம் நிலுவையாக இருந்த ரூபா 2.72 மில்லியன் கடன் மீதி 5 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) இறந்த மற்றும் ஓய்வுபெற்ற 48 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடம் ரூபா 2.87 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 10 வருடங்கள் முதல் 24 வருடங்கள் வரையான காலம் முதல் இறந்த மற்றும் ஓய்வுபெற்ற 23 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களிடம் ரூபா 0.78 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இறந்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக போதியளவு தரவுத் தகவல்கள் முறைமையொன்று அமைச்சில் காணப்படவில்லை.

(ஈ) வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள 10 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடம் ரூபா 0.34 மில்லியன் தொகையான கடன் மீதியொன்று நிலுவையாகக் காணப்பட்டது. அவற்றில் ரூபா 0.13 மில்லியன் 04 உத்தியோகத்தர்களிடம்/ ஊழியர்களிடம் 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(உ) சேவையை இராஜினாமா செய்திருந்த 27 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடம் ரூபா 2.57 மில்லியன் அறவிடப்படவேண்டியிருந்தது. அவற்றில் ரூபா 1.68 மில்லிய்ன் 19 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடம 10 வருடங்களுக்கு மேற்பட்டகாலம் முதல் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஊ) அறவீடுகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் காணப்பட்ட ரூபா 0.50 மில்லியன் கடன் மீதியொன்று இணக்கக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அதில் ரூபா 0.29 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டிய சாரார் சிவில் பாதுகாப்பு என குறிப்பிடப்பட்டிருந்தது. அக்கடன் தொகை தொடர்பான உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. மீதிக் கடன் மீதியாகிய ரூபா 0.21 இற்கான கடன் மீதி 12 வருடங்கள் முதல் 16 வருடங்களுக்கு இடைப்பட்ட காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது.

(எ) அங்கத்துவ கடன் பதிவேட்டின் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தொகையான ரூபா 0.32 மில்லியன் கடன்மீதிகள் மீளாய்வாண்டிற்காக இணக்கக் கூற்றிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஏ) மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று வந்திருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் ரூபா 0.65 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு அந்த கடன்மீதிகளை அமைச்சுக்கு 2016 ஜுன் 14 ஆந் திகதி வரை கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களம், தேசிய பாதீட்டுத் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு 2015 ஜுன் 18 ஆந் திகதி தாமதித்தே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி வருடம் முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான அவ் அறிக்கை 2016 ஜூலை 29 திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 19 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடாத்தப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அமைச்சினால் 2016 ஜூன் 30 ஆந் திகதி வரையும் ஆறு பிரிவுகளின் அவ் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மெய்மையாய்தல் தொடர்பாக 11 பிரிவுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் காணப்படும் உப அலகுகளின் எண்ணிக்கை கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஜூலை 07 ஆந் திகதி வரை குறிப்பிட்டுக் காட்டப்பட்டு பட்டோலைப்படுத்தப்பட்டிருக்காத காரணத்தினால் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து உப அலகுகளிலும் கணிப்பீடு நடைபெற்றதா என கணக்காய்வில் இனங்காண முடியாதிருந்தது.

(iii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்தல் அறிக்கை தெரிவு ஒன்றின் பிரகாரம் 7 பிரிவுகள் தொடர்பாக, பொருண்மையான பெறுமதியினையுடைய 11 பண்ட அலகுகள் பற்றாக்குறையாக இருந்ததென அமைச்சினால் இனங்காணப்பட்டிருந்தது.

(iv) அகுரேகொட முப்படை மற்றும் பாதுகாப்பு நிலையம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மெய்மையாய்தல் சபை அறிக்கையின் பிரகாரம் அகற்ற வேண்டும் என இனங்கண்டிருந்த 24088 விடயங்கள் காணப்பட்டன. அப் பண்டங்களின் செயற்திட்ட வேலைத்தளத்தில் பயன்படுத்தப்பட்டிருந்த காலம் மெய்மையாய்தல் அறிக்கையின் மூலம் இனங்கண்டிருக்கவில்லை. மேலும் அவற்றின் கிரயம் அல்லது மெய்மையாய்வு தினத்தில் பெறுமதி பற்றிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கையின் பிரகாரம் பொருட்பதிவேடு முறைப் பிரகாரம் இற்றைப்படுத்தியிருக்காத 10 சந்தர்ப்பங்களும், பொருட்பதிவேடு பேணப்படாதிருந்த 03 சந்தர்ப்பங்களும், 3 பிரிவுகளில் பொருட்பதிவேட்டு பொருட்களுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக 03 சந்தர்ப்பங்களில் மெய்மையாய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கனணிப் பகுதியில் 86 கணனிகள் மற்றும் துணைக் கருவி விடயங்களுக்காக வழங்கல்கள் கட்டளைகள் காணப்படாத சந்தர்ப்பங்கள் இருந்தன. இதன் காரணமாக

அமைச்சில் பொருட் பதிவேட்டு விடயங்களின் கட்டுப்பாடு திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(vi) பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு நிதிப் பிரமாணங்கள் 757 இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**(ஆ) வெளிசாராருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

அமைச்சினால் 03 மோட்டார் வாகனங்கள் முறையற்ற விதத்தில் முன்னால் அரச உத்தியோகத்தர்கள் இருவருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**(இ) தீர்க்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள், ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 58.38 மில்லியன் தொகை மற்றும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி இனங்காணப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு உட்படுத்தப்படாத ரூபா 8.37 மில்லியன் ஆக ரூபா 66.75 மில்லியன் கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டன. அப் பொறுப்புக்களின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணங்கள் 94 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 07 செலவு விடயங்கள் தொடர்பாக தேறிய நிதி ஏற்பாடுகளை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 9.04 மில்லியனுக்கான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

## 3.9 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(4) | 12.31 | பாதுகாப்பு தலைமையலுவலகத்தின் நிர்மாண செயற்திட்ட கட்டிடமொன்றில் 2014 பெப்ரவரி 15 திகதி ஏற்பட்டிருந்த திடீர் தீப்பற்றல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பூரணமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 218(2) | 0.42 | அமைச்சின் மின்சார பட்டியல் நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கமைய குறிப்பிட்ட காலப்பகுதியில் செலுத்தப்படாமையால் தண்ட வட்டி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 756, 757 மற்றும் 1647(ஆ) | | 2015 ஆண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளிலும் அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணங்கள் 1645(ஆ)(இ) மற்றும் 1646 | | மீளாய்வாண்டின் போது அமைச்சுக்குச் சொந்தமான 155 குழாய் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்பு குறிப்பு அறிக்கை ஒவ்வொரு மாதமும் முடிவடைந்து தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (v) நிதிப் பிரமாணம் 702(3) | | அகுரேகொட செயற்திட்டம் தவிர அமைச்சினால் அபிவிருத்தி வேலைகள், வழங்கல்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் உடன்படிக்கை களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவை** | | |
| (i) வழிகாட்டல் 5.4.11 | 2.19 | வரி இன்வொயிஸ் இன்றி பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 2.19 மில்லியனுக்கான பெறுமதி கூட்டியவரி (VAT) 3 தனியார் கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வழிகாட்டல் 5.4.12 | - | ரணவிரு அரை வீடமைப்பு செயற்திட்டத்தில் மாதாந்தம் செலுத்தப்படும் பெறுமதி கூட்டியவரி தொடர்பாக தொடர்ந்து வரும் மாதத்தில் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (iii) | வழிகாட்டல் 8.9.1 | 96.73 | ரணவிரு அரை வீடமைப்புத் திட்டத்திற்காக எழுத்துமூல உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாத 8 வழங்குனர்களிடம் மீளாய்வாண்டின் போது ரூபா 96.73 மில்லியன் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3.10 உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) அகுரேகொட பாதுகாப்பு மத்திய நிலையம் நிர்மாணித்தல் செயற்திட்டம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணங்கள் 03 மற்றும் 04 இன் பிரகாரம் பொருளாதார, நிதி, சுற்றாடலும் சமூகத் தேவைகள் ஆகிய காரணிகள் அடங்கிய சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று, சுற்றாடல் சார் சிக்கல்களை குறைப்பதற்கான திட்டமொன்று மற்றும் சுற்றாடல்சார் பாதிப்பு மீதான பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாமல் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக நிதிப்பிரமாணங்கள் 20 இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) இந்த செயற்திட்டத்தின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 25,401.82 மில்லியன் தொகைக்காக 2011 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அம் மீதிப்பீட்டிலுள்ள செயற்திட்டத்தின் கட்டம் i இன் கீழ் ரூபா 43,176.32 மில்லியனும், கட்டம் ii இன் கீழ் ரூபா 10,125 மில்லியனும் மற்றும் மேலும் 02 உட்கட்டமைப்பு வசதி விடயங்கள் உட்பட ஆரம்ப மதிப்பீடு ரூபா 55,602.92 மில்லியன் வரையும் 95 சதவீதத்தினால் மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. எனினும் அத் திருத்தங்களுக்காக 2016 மே 30 திகதி வரை அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்கூறிய செயற்திட்டத்திற்குத் தேவையான பணம் இலங்கைத் தரைப்படை மத்திய நிலையம் அமைந்திருந்த காணி 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பனை செய்ததன் மூலம் கிடைத்திருந்த ரூபா 19,871.31 மில்லியன் தொகை அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரைக்கு முரணாக 3 சந்தர்ப்பங்களில்

திறைசேரியினால் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சினால் வழங்கியிருந்த ஆவணங்களின் பிரகாரம் இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்காக அரச வங்கி ஒன்றின் கணக்கினைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பணத்தை திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதியில் அதற்காக ரூபா 5506.77 மில்லியன் வட்டி உழைக்கப்பட்டிருந்தது. அம் முதலீட்டில் இருந்து செயற்திட்ட விடயங்களுக்காக ரூபா 12,265.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததென கணக்காளர் உறுதிப்படுத்திய பின்னர் திறைசேரியின் ஏற்பாட்டின் பிரகாரம் 2015 ஜனவரி 19 ஆந் திகதி கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 13,058.09 மில்லியன் தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் செயற்திட்டத்தின் திரண்ட செலவு ரூபா 11,806.26 மில்லியன் தொகை என செயற்திட்ட அலுவலகம் அறிவித்திருந்தது. அமைச்சின் கணக்காளர் (நிதி) இன் அறிக்கையின் பிரகாரம் அத்தொகை ரூபா 12,265.98 மில்லியன் தொகை என குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வித்தியாசம் தொடர்பாக உரிய இணக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) முன்னைய ஆண்டுகளின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 3,383.18 மில்லியன் தொகைக்கான செயற்திட்ட செலவினமாக என ஒவ்வொரு ஆண்டிலும் கணக்கீடு செய்திருக்கவில்லை. அச் செலவுகள் மீளாய்வாண்டு மார்ச் மாதத்தில் மூலதனச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செலவுகளை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 11 செயற்திட்ட விடயங்களின் கீழ் ரூபா 22,377.68 மில்லியன் நிதியேற்பாடுகள் தேவைப்பாடு ஒன்று இனங்கண்டு திட்டமிடப்பட்டிருந்த விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது மூலதன செலவு விடயம் ஒன்றின் கீழ் ரூபா 7,980.90 நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 1,761.29 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(vii) செயற்திட்டம் தீ அழிவுகளில் இருந்து பாதுகாப்பதற்காக தீப் பாதுகாப்புத் திட்டமொன்றினை நிறுவியிருக்கவில்லை. 2014 பெப்ரவரி 15 ஆம் திகதி ஏற்பட்டிருந்த தீ அபாயத்தின் போது ரூபா 12.31 மில்லியனுக்கான அரச ஆதனங்களுக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. அதன் மூலம் நிர்மாண வேலை கட்டமைப்புகளுக்கு ரூபா 6.53 மில்லியன் நட்டமேற்பட்டிருந்தது.

(viii) உசாத்துணைக் கம்பனி ஒன்று தெரிவு செய்வது தொடர்பாக 2007 ஆண்டின் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளை கவனத்தில் எடுக்காமல் போட்டி அடிப்படையில் விலைகூறல் இல்லாமல் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது 2011 ஆண்டு முதல் கட்டிடக் கலைச் சேவையை நிறைவேற்றுவதற்காக கட்டிடக்கலை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 606.30 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தவேலை சாட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அதற்காக ரூபா 490.57 மில்லியன் தொகை வரை கொடுப்பனவுகள் மேற்கொண்டிருந்த போதிலும் எழுத்துமூலம் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த தனியார் கம்பனிக்கு செயற்திட்ட போதியளவு தொழில்திறனும் இயலளவும் காணப்படவில்லை என செயற்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் நிர்மாண வேலை முகாமைத்துவ அலகு ஆகியவற்றினால் இனங்காணப்பட்டிருந்தது. அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது தொடர்ந்தும் சேவை பெறப்பட்டிருந்தது.

(ix) பொறியியல் உசாத்துணை சேவைக்காக மதிப்பீட்டு பெறுமதியில் 4.5 சதவீதம் கொடுப்பனவு அடிப்படையில் ரூபா 1556.9 மில்லியன் தொகைக்கு மத்திய உசாத்துணை பொறியியல் பணியகத்துடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 1,199 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவை செயற்திட்டத்தினால் உடன்பட்டிருந்த உசாத்துணைக் கட்டணத்தில் 77 சதவீத அளவினைக் கொண்டிருந்தது.

(x) 2012 ஏப்ரல் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிர்மாண வேலைகளில் 35 சதவீத நிலையில் காணப்பட்டது. ஒட்டுமொத்த செயற்திட்ட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி வேலை நெறிப்படுத்தல் ஒன்று நடைபெற்றிருக்கவில்லை. 18 மாதங் (2014-2015) களுக்கு அண்மித்த காலம் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தமை, வேலை இலக்குகளை அறிமுகப்படுத்தி அதன்படி எதிர்பார்த்த கால்ச் சட்டகத்துள் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யாமை, உசாத்துணை சேவைகளை வழங்குதல் மற்றும் பெறுகைகள் விடயங்களில் தாமதங்களின் காரணமாக செயற்திட்டத்தின் நிர்மாண வேலை விடயங்கள் தாமதமடைந்திருந்தன.

(xi) கொழும்பு மாவட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு உட்பட முப்படைகள் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுக்காக வாடகை அடிப்படையில் பெற்றிருந்த 23 இடங்களுக்காக வருடாந்தம் சுமார் ரூபா 326 மில்லியனிற்கான மேலதிகச் செலவு ஒன்று ஏற்பட்டிருந்தது.

**(ஆ) ஆள் அடையாள செயலகக் கட்டிடங்கள் செயற்திட்டம்**

20 மாடிகளைக் கொண்ட ஆள் அடையாள செயலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2012 ஜூலை மாதம் முதல் 03 வருடங்களில் பூர்த்தி செய்யும் அடிப்படையில் சர்வதேச ஒப்பந்த கம்பனி ஒன்றுடன் இணைந்த நிர்மாண வேலை கம்பனி ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்தது. இதற்காக 02 தனியார் வங்கிகள் மற்றும் 02 அரச வங்கிகள் மூலம் நிர்மாண வேலை காலப்பகுதியில் கடனைத் திருப்பி செலுத்தப்படாத மூன்று வருட சலுகைக் காலமொன்று மற்றும் 2015 ஆகஸ்ட் மாதம் முதல் 15 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் ரூபா 7,550 மில்லியன் கடனை பெறுவதற்காக 2012 ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்பட்ட 2015 ஜூலை 30 திகதி வரை மேற்கூறிய 04 வங்கிகளில் இருந்து பெற்றிருந்த இணைந்த கடன்தொகை (மூலதனப்படுத்திய வட்டியுடன்) ஆகிய ரூபா 8,295 மில்லியன் தொகை மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 7,004 தொகை ஆகியிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குறிப்பிட்ட வங்கிகளில் இருந்து கடன்பெறல் மற்றும் உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்காக அமைச்சுச் செயலாளருக்கு அதிகாரம் சாட்டப்பட்ட முறை மற்றும் கடன் பெறுவதற்காக திறைசேரியின் அங்கீகாரமும் இணக்கமும் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த கடன் திருப்பிச் செலுத்தல்கள் செலவு விடயம் 3001 இன் கீழும், வட்டி செலுத்துதல்கள் செலவு விடயம் 1701 இன் கீழும், கணக்கீடு செய்யப்பட வேண்டுமெனினும், அவை செலவு விடயம் 2502 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த அரசாங்கத்தினால் மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த கடன்

தவணைகளின் எண்ணிக்கை மற்றும் வட்டி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டு இறுதியளவில் பெற்றிருந்த கடன் தொடர்பாக கடன் மற்றும் வட்டியாக ரூபா 14,752.75 மில்லியன் தொகையொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்தது. அப்பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் கடன் தவணைகள் செலுத்துதல் மூலம் ஏற்படும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதியாகிய ரூபா 267.61 மில்லியன் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதியாகிய ரூபா 267.61 மில்லியன் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நடைமுறையல்லாத அசையும் அறிக்கையில் உட்படுத்தியிருக்கவில்லை.

(iv) மேற்கூறிய செயற்திட்டத்தில் உசாத்துணையாளராக கடமையாற்றிய கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 63.82 மில்லியன் உசாத்துணை சேவைக் கட்டணம் முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 61.26 மில்லியன் தொகை என திருத்தப்பட்டு எழுதப்பட்டிருந்த காசோலை 2016 ஏப்ரல் 26 கணக்காய்வுத் திகதி வரையும் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இந்த பொறுப்பு தொடர்பாக உசாத்துணை நிறுவனத்தினாலும் உரிமை கோருவதற்கு முன்வந்திருக்கவில்லை.

**(இ) தந்திரோபாய ரீதியான பாதுகாப்பு தொலைதொடர்பு வலைப்பின்னல்**

முப்படைகளிடையே வலயத்தில் காணப்படும் நவீன தெலைதொடர்பு முறைமைக்கு சமமான விதத்தில் தொடர்ச்சியான பாதுகாப்பான மற்றும் தொலைதொடர்பு வலைப்பின்னல் ஒன்றும் வழங்குதல் உட்பட மேலும் 8 அடிப்படை குறிக்கோள்கள் நிறைவேற்றுவதற்காக ரூபா 1,192 மில்லியன் தொகைக்கான மதிப்பீடு ஒன்றின் மீது 2014 ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 2 வருட செயற்திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அம் மதிப்பீடு மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 1,297.25 மில்லியன் வரையும், மீண்டும் அசாதாரணமான விதத்தில் ரூபா 1,854 மில்லியன் வரையும் திருத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்படும் உசாத்துணை கட்டணம் அதிகரிக்கப்படும் போக்கொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதி வரை செயற்திட்ட காலம் ஒன்றரை வருடங்கள் கழிந்திருந்த போதிலும் 2016 ஜுலை 25 திகதி வரை ரூபா 22.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 2 சதவீத நிலையிலேயே காணப்பட்டது. தொலைதொடர்பு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் பொருத்தப்பட வேண்டிய 22 மின்பிறப்பாக்கிகள் மீளாய்வாண்டின் போது விளைவற்று காணப்பட்டன. 22 தொலைதொடர்பு கோபுரங்களின் நிர்மாணவேலைகளின் அடிப்படை விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை, செயற்திட்ட செயலாற்றுகை ஆரம்ப கட்டத்தில் காணப்படல், குறிப்பிட்ட செயற்திட்டத்தின் திட்டமிடல் காலம் மற்றும் கிரயத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணத்தினால் செயற்திட்டத்தின் எதிர்ப்பார்த்த பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளல் உறுதியற்ற நிலையில் இருந்தது.

**(ஈ) கொழும்பு நகர அபிவிருத்தி செயற்திட்டம்**

மீளாய்வாண்டிற்கான மூலதன செலவு விடயம் ஒன்றின் கீழ் கொழும்பு நகர அபிவிருத்தி செய்திட்டத்திற்காக ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது செயற்பாடுகள் ஏதும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மற்றும் பெறுகைகள் திட்டத்தில் அச் செயற்பாடுகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த நிதி ஏற்பாடுகளின் மூலம் ரூபா 0.77 மில்லியன் கம்பஹா மாவட்டத்தில் பியகமவில் அமைந்துள்ள உடற்பயிற்சி நட்டப்பாதை திருத்த வேலைக்காக செலவிடப்பட்டிருந்தது.

**(உ) ரணவிரு அரை வீடமைப்புச் செயற்திட்டம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 5.1.1.5.5 பந்தியில் செயற்திட்டம் தொடர்பாக செயற்பாடுகளைக் காட்டும் போது வருடாந்தம் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் காட்டப்பட்டிருந்தது. எனினும் காலாண்டு அடிப்படையில் இலக்குகளை அமைத்தல் அல்லது கால வரையறைகள் தீர்மானித்தல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை காரணியாக, தெரிவு செய்யப்பட்டிருந்த நலன்பெறுவோரின் எண்ணிக்கை காட்டப்பட்டிருந்ததுடன் நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை அல்லது வீடுகள் வழங்கப்பட்டிருந்த நலன்பெறுவோரின் எண்ணிக்கை என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட கண்காணிக்கும் மத்திய நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செலவு விபரங்கள் மற்றும் வாக்குப்பண பேரேட்டில் பதிவு செய்யப்பட்ட செலவுகளை பரிசோதனை மேற்கொண்ட போது 06 மாதங்கள் தொடர்பாக ரூபா 3.11 மில்லியன் தொகை வாக்குப்பணப் பேரேட்டில் மிகையாகவும் 03 மாதங்கள் தொடர்பாக ரூபா 125.54 மில்லியனிற்கான செலவுகள் வாக்குப்பண பேரேட்டில் குறைவாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(iii) செயற்திட்டம் தொடர்பாக ரூபா 1,000 மில்லியன் ஆக இருந்த நிதியேற்பாடுகளில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் செலவுகள் என ரூபா 136.93 மில்லியன் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. அவை செயற்திட்ட பெறுகைகள் குழுவின் ஊடாக 5 செயற்பாட்டு கட்டங்களின் மூலம் 14 சந்தர்ப்பங்களில் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்விடயம் வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கும் போது பெறுகைகள் செயற்பாடுகள் என உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) முறையான முகாமைத்துவத்தின் கீழ் செயற்படாமையால் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்கு கிடைத்திருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 190 மில்லியன் அதாவது மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 19 சதவீதத்தை பயன்படுத்த முடியாதிருந்தது.

(v) செயற்திட்டம் தொடர்பாக புறம்பாக செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்று அமைச்சினால் நடாத்தியிருக்காததுடன் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட பகுதி என செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிருவாகப் பிரிவு இனங்காணப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பிரிவிலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் எழுத்து மூலமாக செயற்திட்ட கடமைகள் சாட்டப்படுதல் கணக்காய்வுத் திகதியாகிய 2016 செப்தெம்பர் 26 திகதி வரையும் வழங்கியிருக்கவில்லை.

**3.1.1 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகள்**

**சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதுகாப்பு அமைச்சினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளிப்படுத்தப்பட்ட வழங்கப்பட்டுள்ள ஆனால் கொடுப்பனவுக்காக

சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள 01 வருடத்தை விட குறைவாக காலங்கடந்துள்ள ரூபா 0.11 மில்லியன் தொகைக்கான 12 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதியில் சுடுபடைக் கலன்கள் மற்றும் வெடி பொருட்கள் வருமானம் என 04 காசோலைகளின் மூலம் பெற்றிருந்த ரூபா 0.23 மில்லியன் மீளாய்வாண்டிற்கான காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அவ்வருமானம் பெறுவனவு பதிவேடுகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 3.1.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தின் கீழ் சிவில் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களின் பெற்றோருக்கு ரணவிரு பெற்றோர் அர்ப்பணிப்பாளர் படி கொடுப்பனவு செய்வதற்கு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2015 ஜனவரி 29 திகதிக்கு பின்னர் அமைச்சின் வாக்குப்படி பேரேட்டின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 29.93 மில்லியனுக்கான செலவுகள் தொடர்பாக அதிகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 3.1.3 இழப்புகளும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட இழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 2013 ஆண்டின் போது விபத்திற்கு உள்ளாகிய அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்டிருந்த இழப்பு ஒன்று தொடர்பாக ரூபா 0.38 மில்லியன் குறைவாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. ஏற்பட்டிருந்த நட்டங்கள் தொடர்பாக 1.10 மில்லியனுக்கான உரிமையினை காப்புறுதி நிறுவனத்திலிருந்து அறவீடு செய்வதற்கும், விசாரணை அறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 0.15 மில்லியன் தொகைக்கான நட்டத்தை அறவீடு செய்வதற்கும் 2016 செப்தெம்பர் 26 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2006 ஆண்டின் போது விபத்துக்கு உள்ளாகியிருந்த அமைச்சிற்கு சொந்தமான ஜீப் வண்டிக்கு ஏற்பட்டிருந்த நட்டத்திலிருந்து ரூபா 0.23 மில்லியன் தொகை கணக்காய்வு திகதியான 2016 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்திருந்தது. எனினும் அது தொடர்பான குறிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிட்டிருக்காததுடன் ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 0.90 மில்லியன் தொகையினை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.1.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்கான 2014 ஆண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் பந்தி 3.12(ஊ) பந்தியில் சுட்டிக் காட்டியிருந்த முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் வெளித்தரப்பானருக்கு வழங்கப்படும் சேவைகளின் மூலம் உழைக்கும் வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தல் தொடர்பாக 2015 ஜூன் 22 திகதி பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதில் அடங்கியுள்ள நிறுவனங்களுடன் எடுத்திருந்த ஒன்றித்த தீர்மானம் தொடர்பாக 2015 செப்தெம்பர் 25 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது உழைத்துள்ள வருமானம் மற்றும் அவற்றை செலவு வைத்தல் பற்றிய விபரங்கள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 3.1.5 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சுக்கு சொந்தமான காணிகள் தொடர்பான விபரங்கள் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மற்றும் பேரேட்டில் பதிவுகள் பேணப்பட்டிருக்காமையால் அமைச்சுக்கு சொந்தமான காணிகளின் எண்ணிக்கை, பிரதேசத்தின் அளவு மற்றும் அவற்றின் நியாயமான பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியினை இனங்காண முடியாதிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் அமைச்சினால் இனங்கண்டிருந்த 5 காணி அலகுகள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் கணக்காய்வுத் திகதி வரை காணிகளின் நிருவாகம் தொடர்பாக முறையான வேலைத்திட்டம் ஒன்று அமைச்சினால் இனங்கண்டிருக்கவில்லை.

(ஆ) பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமான பாவனைக்கு உதவாத 06 வாகனங்களை பாதுகாப்புச் செயலாளரின் அங்கீகாரத்தின் மீது பெறுமதி மதிப்பீட்டு தொகையை விட குறைவாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைக்கு விற்கப்பட்டிருந்தது. அவ்வாறு பெறுமதி மதிப்பீட்டுத் தொகையை விட குறைந்த விலைக்கு வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 0.43 மில்லியனுக்கான நட்டமொன்று திரட்டு நிதியத்துக்கு ஏற்பட்டிருந்தது.

(இ) நமக்காக நாம் நிதியம் என்ற பேரில் தனிப்பட்ட நியதிச் சட்ட நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போது மற்றும் அதில் போதியளவு நிதி காணப்படும் போது அந்நிதியத்தில் இருந்து புத்தளம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீடுகளை கையளிக்கும் விழாவுக்காக மேடை உபகரணங்கள் மற்றும் விழாவிற்கான பொருட்களின் வாடகை ஆன தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 3.7 மில்லியன் அமைச்சுச் செலவினத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய சேவையினை பெறும்போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3.4.1 வழிகாட்டலின் பிரகாரம் விலைகோரல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.1.6 மனித வள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 45 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 9 | 8 |
| (iii) | இரண்டாம் நிலை | 261 | 174 | 87 |
| (iv) | ஆரம்ப நிலை | 156 | 119 | 37 |
| | **மொத்தம்** | **489** | **347** | **142** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

52 உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் 7 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து இடமாற்றம் பெற்றுக்கொடுக்காமல் அமைச்சில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) வேறு தரப்பினரிடம் பெற்றிருந்த மனித வளங்கள்**

ஆயுதப் படைகளின் 53 பேரும், ஏனைய பதவி அங்கத்தவர்களில் 204 பேரும் சீருடை அல்லாத 34 பேரும், அமைச்சின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சேவையில் ஈடுபடுத்தியிருந்த இந்த பதவியணியினர்களை அமைச்சுக்கு இணைத்துக் கொள்வது தொடர்பாக இற்றைப்படுத்திய தரவு முறைமை ஒன்று அமைச்சின் வசம் காணப்படவில்லை.